**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி**

முன்னிலை : திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி

2026 ம் வருடம் மார்ச் மாதம் 18 ம் நாள் புதன்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண்.98/2026**

**********

அகமது முஸ்தபா – 34/24,
த/பெ.முகமது அபுபக்கர்,
வீரசோழன்,
திருச்சுழி தாலுகா,
விருதுநகர் மாவட்டம். :: மனுதாரர்/சொத்தின் உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக
சார்பு ஆய்வாளர்,
வீரசோழன் காவல் நிலையம்
குற்ற எண்.46/2023,
பிரிவுகள் 143, 294(பி), 427, 323, 452, 506(2) இதச
:: எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

*******

இம்மனு என் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.1 திருச்சுழி திரு.செந்தில்குமார்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்/சொத்தின் உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பிரேம்குமார்,B.A.,L.L.B., அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து இன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இருதரப்பு வாதமும் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர்/சொத்தின் உரிமையாளர் தரப்பில் இவ்வழக்கின் சொத்தான SAMSUNG GALAXY A54 5G மொபைல் போனை திரும்ப வழங்க கோரி பிரிவு 497, 503 BNSS–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுவின் சுருக்கம்</u>:–

2. மனுதாரர்/சொத்தின் உரிமையாளர் தனது மனுவில் வீரசோழன் காவல் நிலையத்தில் குற்ற எண்.46/2023 பிரிவுகள் 143, 294(பி), 427, 323, 452, 506(2) இதச–ன் கீழ் வழக்குபதிவு செய்து, மேற்படி வழக்கின் சொத்தான SAMSUNG GALAXY A54 5G மொபைல் போனை காவல் துறையினர் கைப்பற்றி கனம் நீதிமன்றத்தில் தங்களது பாதுகாப்பில் வைத்துள்ளதாகவும், மேற்படி மொபைல் போனை வைத்து மனுதாரர் எந்தவித குற்ற செயல்களிலும் ஈடு பெறவில்லை. மனுதாரர் தனது பயன்பாட்டிற்கு தன்னிடம் மொபைல் போன் இல்லை. மேலும் மேற்படி மொபைல் போனை மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் நீதிமன்றம் வேண்டும் போது எந்தவித மாற்றமுமின்றி ஆஜர் செய்து நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என்று உறுதி கூறியுள்ளார்.

3. மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டது.

<u>எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரை</u>:–

4. குற்றமுறையீட்டாளர் தரப்பில் பதிலறிவிப்பு பெறப்பட்டது. இவ்வழக்கானது கனம் நீதிமன்றத்தில் Crlmp No.98/2026–ன் பிரகாரம் கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருப்பதாலும், மேற்படி மொபைல் போனை மனுதாரரின் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் வழக்கு சம்பந்தமான ஆடியோ மற்றும் வீடியோ ஆதாரங்களை அழித்துவிடவோ அல்லது சமூக வலைதளங்களில் பரப்பி விடுவதற்கு வாய்ப்பு உள்ளதாலும், வழக்கின் சொத்தான SAMSUNG GALAXY A54 5G மொபைல் போனை மனுதாரர்/சொத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது.

<u>தீர்முடிவு</u>:–

5. இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது, வீரசோழன் காவல் நிலையத்தில் குற்ற எண்.46/2023 பிரிவுகள் 143, 294(பி), 427, 323, 452, 506(2) இதச–ன் கீழ் வழக்கில் கண்ட

சொத்தான SAMSUNG GALAXY A54 5G மொபைல் போனை இந்நீதிமன்றத்தில் பி.ஆர்.நம்பர்.**196/2023** ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கின் சொத்தான SAMSUNG GALAXY A54 5G மொபைல் போனை மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் வழக்கு சம்பந்தமான ஆடியோ மற்றும் வீடியோ ஆதாரங்களை அழித்துவிடவோ அல்லது சமூக வலைதளங்களில் பரப்பி விடுவதற்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவித்திருந்தாலும், மேற்படி மொபைல் போனில் வழக்கு சம்பந்தமான ஆடியோ மற்றும் வீடியோக்களை உரிய முறையில் பாதுகாத்து வைப்பதற்கோ, அல்லது ஆய்வுக்கு அனுப்புவதற்கோ புலன் விசாரணை அதிகாரி எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. மேலும் மனுதாரர் தரப்பில் மேற்படி மொபைல் போனை வைத்து மனுதாரர் எந்தவித குற்ற செயல்களிலும் ஈடு பெறவில்லை என்றும், மனுதாரர் தனது பயன்பாட்டிற்கு தன்னிடம் வேறு மொபைல் போன் எதுவும் இல்லை என தெரிவித்துள்ள நிலையிலும், மேலும் மேற்படி மொபைல் போனை மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் நீதிமன்றம் வேண்டும் போது எந்தவித மாற்றமுமின்றி ஆஜர் செய்து நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என்று உறுதி கூறியுள்ள நிலையிலும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு வழக்குச் சொத்தை மனுதாரர்/சொத்தின் உரிமையாளர் வசம் இடைக்காலமாக ஒப்படைப்பதுதான் நீதியின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) எனவே கீழ்கண்ட நிபந்தனைகளின் படி மனுதாரர்/சொத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/சொத்தின் உரிமையாளர் தானும் தனக்காக ஒரு நபரும் **ரூ.10,000/-**க்கு பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரர் மேற்படி வழக்குச் சொத்தினை வழக்கு முடியும் வரை விற்கவோ, மாற்றவோ, உருவமாற்றம் செய்யவோ கூடாது.

3. மேற்படி வழக்கின் சொத்தினை விசாரணை காலங்களிலும், நீதிமன்றம் உத்தரவிடும் காலங்களிலும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

4. மேற்படி வழக்கு சொத்துக்குரிய கலர் புகைப்படம் மூன்று, குறுந்தகடு மூன்று ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். (ஒரு புகைப்படம் மற்றும் ஒரு குறுந்தகடு நீதிமன்றத்திற்கும், மற்றொன்று விசாரணை காவல்துறையின் இவ்வழக்கு கோப்பிற்கும் (CD File), மற்றொன்று மனுதாரர் தன் கைவசம் வைத்துக்கொள்ள வேண்டும்). மேற்படி புகைப்படத்தின் பின்புறம் மனுதாரர் வழக்குச் சொத்துதான் புகைப்படத்தில் உள்ளது என்றும், வழக்கு விசாரணையின் போது வழக்குச் சொத்தின் அடையாளத்தை பொறுத்து ஆட்சேபனை தெரிவிக்க மாட்டேன் என்றும், மேலொப்பம் எழுதிக் கொடுக்க வேண்டும். மேலும் தலைமை எழுத்தர் மேற்படி வழக்கு சொத்து தான் புகைப்படத்தில் உள்ளது என்று புகைப்படத்தின் பின்புறம் சான்றொப்பம் செய்ய வேண்டும்.

5. தலைமை எழுத்தர் வழக்குச் சொத்து பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும்.

6. மேலும் புகைப்படம் மற்றும் குறுந்தகடிற்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B சான்றிதழ் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

*மேற்படி உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு **2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18**ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.*

VELSURYA SHREERAM
Digitally signed by VELSURYA SHREERAM

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.